ConnectABILITY
A project of Community Living Toronto

## மாறுபட்ட முறையில தொடர்பு கொள்ளுதல்

குழந்தைகள் வார்த்தைகள் உபயோகப்படுத்துவதோடு வேறுசில வழிகளையும் பாவித்து நம்மிடம் தொடர்பு கொள்ளுவதை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த வழிகள் சொற்களுக்கு பதிலாகாது. ஆனால் அவை வார்த்தைகள் கொண்ட மொழியை பூர்த்தி செய்வதோடு பிள்ளைகள் தங்களிடம் உள்ள திறமைகளை வெளிப்படுததஉதவும்.

*சில மாறுபட்ட தொடர்பு கொள்ளும் முறைகள்:*

1. படங்கள் : பிள்ளைகள் படங்கள் வைத்து தொடர்புகொள்வர்.இத்தகைய படங்கள் புகைப்படங்களாகவோ அல்லது வரைப்படங்களாகவோ இருக்கலாம்.ஒவ்வொரு படத்துக்கும் ஒரு பெயரிடவேண்டும்.ஒரு படம் ஒரே செயலையோ அல்லது சொல்லையோ எல்லா சூழ்நிலைகளிலும் குறிக்கவேண்டும். (உ.ம்) குழந்தை பராமரிப்பு நிலையம் மற்றும் வீடு.

2. சைகைகள்:குழந்தை உலகெங்கும் அறியக்கூடிய சைகைகளைப் பாவித்துத் தொடர்புக்கொள்வார்

3. பொருள்கள்:பிள்ளை உண்மையான பொருள்களைப் பாவீத்துத் தொடர்புக் கொள்வார். (உ.ம்) பிள்ளை ஒரு பொருளைப் பார்த்தோ அல்லது தொட்டோ தனக்கு அது வேண்டும் என்றுகூறுவது.